**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திண்டிவனம்,**

**முன்னிலை: ஸ்ரீமதி. ம. இளவரசி M.L.,**

**நீதித்துறை நடுவர் எண். I திண்டிவனம்.**

**2026 ஆம் ஆண்டு மே மாதம் 07-ம் நாள் வியாழக்கிழமை**

**2057 திருவள்ளுவராண்டு, ஸ்ரீபராபவ வருடம், சித்திரை திங்கள் மாதம் 24 -ம் நாள், வியாழக்கிழமை**

**<u>CC. No. 143 of 2022</u>**

**<u>(CNR No.TNVP10-001882-2025)</u>**

| | | | |
|---|---|---|---|
| 1 | வழக்கு எண் | : | C.C. No.143/2022 |
| 2 | குற்ற முறையீடுபவர் | : | தமிழ்நாடு அரசு அதன் சார்பாக<br>காவல் உதவி ஆய்வாளர்<br>திண்டிவனம் காவல் நிலையம்,<br>குற்ற எண். 1095/2021,<br>இதச பிரிவுகள் 341, 323, 324, 506(1) |
| 3 | எதிரிகள் விவரம் | 1. | மூர்த்தி, வயது 26,<br>த/பெ கண்ணன்,<br>நெ.44/1, பெலாகுலத் வீதி,<br>பேராவூர் கிராமம்,<br>உலகலாபுரம் அஞ்சல்,<br>வானூர் |
| | | 2. | ராமு, வயது 25,<br>த/பெ கண்ணன்,<br>நெ.44/1, பெலாகுலத் வீதி,<br>பேராவூர் கிராமம்,<br>உலகலாபுரம் அஞ்சல்,<br>வானூர் |

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.05.07 05:40:05 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 3. கணேசன் (எ) டெல்லி, வயது 19,<br>த/பெ கண்ணன்,<br>நெ.44/1, பெலாகுலத் வீதி,<br>பேராவூர் கிராமம்,<br>உலகலாபுரம் அஞ்சல்,<br>வானூர். | | |
| 4 | சம்பவ தேதி | : | 05.12.2021 | | |
| 5 | முறையீடு | : | 05.12.2021 | | |
| 6 | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாள் | : | A1 to A3 Anticipatory Bail | | |
| 7 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 15.07.2022 | | |
| 8 | குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | : | 27.01.2023 | | |
| 9 | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | ---- | | |
| 10 | சாட்சிகளின் விசாரணை | : | **Witness** | **Date of Chief** | **Date of Cross** |
| | | | PW-1 | 24.09.2025 | 24.09.2025 |
| | | | PW-2 | 24.10.2025 | 24.10.2025 |
| | | | PW-3 | 08.12.2025 | 08.12.2025 |
| | | | PW-4 | 15.12.2025 | 15.12.2025 |
| | | | PW-5 | 25.02.2026 | 25.02.2026 |
| | | | CW-1 | 27.04.2026 | 27.04.2026 |
| 11 | பிரிவு 351(1)(பி)BNSS ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 28.04.2026 | | |

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.05.07 05:40:13 +0530

| | | | |
|---|---|---|---|
| 12 | எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விவரம் | : | இல்லை |
| 13 | மேல்முறையீடு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை |
| 14 | தண்டனை அல்லது உத்தரவு | : | எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 323,324,506(1) ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) - BNSS- ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 15 | காலதாமதத்தின் விளக்கம் | : | ___ |

இவ்வழக்கானது கடந்த 15.07.2022-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 29.04.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T.M.சிவக்குமார், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு பின்பு வழக்கு ஆவணங்களையும் பரிசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றத்தில் வழங்கும்.,

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.05.07 05:40:20 +0530

## தீர்ப்புரை

**1) குற்ற அறிக்கையின் சுருக்கம்:-**

இவ்வழக்கின் அரிகிருஷ்ணன் தங்கையான நாகலட்சுமி என்பவருக்கும் அவரது கணவரின் குடும்பத்தினருக்கும், நாகலட்சுமியின் பெரிய மகளுக்கு மாப்பிள்ளை பார்ப்பதில் பிரச்சினை ஏற்பட்டு நாகலட்சுமியும் அவரது கணவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் எனவும், இந்நிலையில் நாகலட்சுமிக்கு அவரது மச்சனன் கண்ணன் என்பவர் போன் செய்து குடும்பத்திற்கும் சண்டை வேண்டாம் சமாதானம் பேசிக்கலாம் என்று அழைத்ததன் பேரில் நாகலட்சுமி பாண்டிச்சேரியில் இருந்து வானூர் தாலுக்கா பேராவூர் கிராமத்திற்கு சென்றபோது அங்கு நாகலட்சுமியின் மச்சனன் மற்றும் அவர்களது மகன்களான எதிரிகள் தாக்கிவிட்டதாக கிளியனுர் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்துவிட்டு நாகலட்சுமிக்கு காயம் ஏற்பட்டிருந்ததால் அவரை அரிகிருஷ்ணன் அழைத்துக்கொண்டு திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு செய்ய வேண்டி வாடகை காரில் திண்டிவனம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட திண்டிவனம் நேரு வீதிக்கு செல்லும் மேம்பாலத்தின் இறக்கத்தில் வந்தபோது எதிரிகள் மூவரும் அரிகிருஷ்ணன் வந்த காரை வழிமடக்கி நிறுத்தி அரிகிருஷ்ணனை பார்த்து உன்னை கொலை செய்யாமல் விடமாட்டோம் என்று கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்தும் அரிகிருஷ்ணனை எதிரிகள் மூவரும் தடியால் கன்னம் மற்றும் உடல் முழுவதும் மாறி, மாறி அடித்து சொற் காயத்தை ஏற்படுத்தி குற்றம் புரிந்ததாக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 323,324,506(1) ன் படி திண்டிவனம்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.05.07 05:40:27 +0530

காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட இவ்வழக்கானது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 323,324,506(1)- ன் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச.பிரிவு 207- ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4) வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிகள் மீது குற்றச்சாட்டு வினவுவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் இதச பிரிவுகள் 341, 323,324,506(1) ன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்து வனைந்து விளக்கி கூறி வினவிய போது எதிரிகள் அவற்றை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறியதால் அரசு தரப்பில் சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5) இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா. 1 முதல் அ.சா. 5 வரையிலான சாட்சிகள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிடப்படவில்லை. நீதிமன்ற சாட்சி -1 விசாரிக்கப்பட்டுள்ளார்.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.05.07 05:40:34 +0530

6) <u>அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம்:</u>

- ➔ காயம் பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சம்பவம் பற்றியும், புகார் அளித்தது பற்றியும் சாட்சியமளித்துள்ளார்.
- ➔ கேள்விப்பட்ட சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2 சம்பவம் பற்றி தெரியாது என அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார்.
- ➔ கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.3 சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ளார்
- ➔ பார்வை மகசர் சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.4 திண்டிவனம் மேம்பாலம் இறங்கும் இடத்தில் நேரு வீதி அருகே போலீசார் கையொப்பம் பெற்றதாகவும், எதற்கு கையொப்பம் வாங்கினார்கள் என தெரியாது என அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார்.
- ➔ காவல் உதவி ஆய்வாளர் அ.சா.5 வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியமளித்துள்ளார்.
- ➔ நீதிமன்ற சாட்சி -1 வேத பிரகாஷ் சம்பவம் பற்றியும் அவருக்கு ஏற்பட்ட காயம் பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.

7). அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிகளை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1)(பி) -ன் படி வினவியபோது எதிரிகள் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தனர். எனவே, எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

8) <u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:-</u>

**இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 323,324,506(1) - ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

ELAVARASI Digitally signed by ELAVARASI
Date: 2026.05.07 05:40:41 +0530

9) வாய்மொழி வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

10) அரசு தரப்பில் வாய்மொழி வாதம் முன்வைக்கப்படவில்லை.

11) எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் சம்பவ இட சாட்சிகள் எந்த எதிரி எங்கு அடித்தார் என குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. சம்பவ இட சாட்சிகள் முரண்பட சாட்சியம் அளித்துள்ளனர். இரண்டு சம்பவம் நடைபெற்ற நிலையில் எந்த சம்பவத்திற்கு விபத்து பதிவேடு பதிவு செய்யப்பட்டது என்பது முரண்பட உள்ளது. சம்பவ நேரம் குறித்து தெளிவுபடுத்தப்படவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை அளித்து எதிரிகளை குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**12) சாட்சிய பரிசீலனைகளும், தீர்வும் :-**

**வழக்கின் சம்பவம் குறித்து அ.சா.1 முதல் அ.சா.3 மற்றும் நீதிமன்ற சாட்சி -1 ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளனர்.** வழக்கில் பாதிக்கப்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான **அ.சா.1 திரு. ஹரிகிருஷ்ணன்** அவரது சாட்சியத்தில் தனது தங்கை நாகலட்சுமி அவரது மகளுக்கு மாப்பிள்ளை பார்த்தது சம்பந்தமாக தனது தங்கைக்கும், தங்கையின் கணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு சமாதானம் பேச தானும், தனது தங்கை மற்றும் தனது மகனும் சென்றதாகவும், பிரச்சினை தனது மச்சான் ஏழுமலையின் தம்பி கண்ணன் வீட்டின் அருகே நடந்தது எனவும், அந்த

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.05.07 05:40:47 +0530

பஞ்சாயத்தில் கண்ணன் மற்றும் அவர்களின் பிள்ளைகள் ராமு கணேசன் மற்றும் ஒரு பிள்ளை ஆகியோர் கத்தி தடியால் தனது தங்கையை கொலை மிரட்டல் விடுத்து தாக்கி விட்டார்கள் எனவும், தான அதனை மறித்து திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு தனது தங்கையை அழைத்துச் சென்றதாகவும், கடந்து 2022- ம் வருடத்தில் ஒரு நாள் காலை 10:30 முதல் 11 மணி அளவில் திண்டிவனம் மேம்பாலத்தில் தனது தங்கையை அழைத்துக் கொண்டு காரில் வந்தபோது எதிரிகளின் தலைமையில் 15 நபர்கள் கத்தி, தடி ஆகியவற்றை காட்டி வழி மறித்து கத்தியை கழுத்தில் வைத்து உனக்கு என்னடா வேலை என என்னையும், எனது மகனையும் தங்கையும் மிரட்டி தாக்கினார்கள் எனவும், எதிரிகள் தன்னை தடியால் உடல் முழுவதும் தாக்கினார்கள் எனவும் காரின் உள்ளே இருந்த தனது தங்கையும் தடியால் அடித்து தேவிடியா என திட்டி மிரட்டினார்கள் எனவும், தனது மகன் தடியால் முதுகு, உடம்பில் அடித்து காலால் எட்டி உதைத்தார்கள் எனவும், இது சம்பந்தமாக தான் திண்டிவனம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், பின்னர் பாண்டிச்சேரி தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

13. எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.1 புகார் எழுதிய தேதி தற்போது நினைவில்லை எனவும், சமரசம் பேச தனது தங்கையுடன் தான் சென்றதாகவும், வீட்டின் வெளியே நின்று கொண்டிருந்ததாகவும், போலீசார் விசாரித்தபோது தனது கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டியதை சொல்லி உள்ளதாகவும், உதய பிரகாஷ்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.05.07 05:40:53 +0530

தனது மகன் எனவும், 15 பேர் கொண்ட கும்பலில் யார் எந்த ஆயுதத்தை வைத்திருந்தார்கள் என்று பெயர் குறிப்பிட்டு தெரியாது எனவும், ஆட்களைப் பார்த்தால் அடையாளம் சொல்வேன் எனவும் குறிப்பிட்டுள்ளார். தனது காரின் ஓட்டுநருக்கு சம்பவம் தெரியும் எனவும், அவரையும் மிரட்டினார்கள் எனவும், பேராவூரணியில் நடந்த சம்பவத்திற்கு கிளியனூரில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், அந்த வழக்கின் புகார் சம்பந்தமாக இவ்வழக்கில் ஆவணங்கள் கொடுக்கவில்லை எனவும், பேராவூரணியில் நடந்த முதல் பிரச்சனைக்கு பிறகு திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டு வரும் வழியில் இரண்டாவது பிரச்சனை நடந்து பயந்துகொண்டு இங்கு சிகிச்சை எடுக்கவில்லை எனவும், பாண்டிச்சேரி தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். திண்டிவனத்தில் நடந்த பிரச்சனைக்கு பாண்டிச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

14, கேள்வியுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.2 திரு. கிருஷ்ணமூர்த்தி** வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 பிறழ் சாட்சியமாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். எனினும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எவ்வித சாட்சியமும் முன்னிடப்படவில்லை.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.05.07 05:40:59 +0530

15. கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.1ன் தங்கையான **அ.சா.3 திருமதி. நாகலட்சுமி** அவரது சாட்சியத்தில் சுமார் 4 வருடத்திற்கு முன்னதாக ஒரு நாள் தானும் தனது அண்ணன், ஓட்டுனர், அண்ணன் மகன் பிரகாஷ் ஆகியோர் மகளின் திருமண விஷயமாக பேராவூருக்கு சென்று பேசியபோது பிரச்சனை ஏற்பட்டு அது சம்பந்தமாக திண்டிவனம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க மேம்பாலத்தின் மேல் வந்தபோது சுமார் பகல் 12 மணி அளவில் எதிரிகள் ராமு, கணேஷ், மூர்த்தி அவர்களுடன் 15 நபர்கள் வந்து காரை மறித்து சண்டை போட்டு தன்னையும், தனது அண்ணனையும், அண்ணன் மகனையும், தடியால் அடித்தார்கள் எனவும், அதில் தனக்கு இடது கையில் அடிபட்டதாகவும், தனது அண்ணனுக்கு உள் அடிபட்டதாகவும், பிரகாஷுக்கு உடல் முழுவதும் அடிபட்டதாகவும், கும்பலில் யார் அடித்தார்கள் என தெரியாது எனவும், தற்போது தானும், எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டதாகவும் அடிபட்டவுடன் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக் கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். அ.சா.3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

16. சம்பவ இட சாட்சிகளின் சாட்சியத்தின் அடிப்படையில் இவ்வழக்கில் சரண்யா என்பவர் சம்பவ இடத்தில் இருந்ததாகவும், அவரை விசாரிக்க மனு தாக்கல் செய்ததாகவும் அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்த போதிலும், போதிய கால அவகாசம் அளித்த போதிலும் சரண்யா என்பவரை விசாரிக்க அரசு தரப்பில் எந்த

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.05.07 05:41:05 +0530

நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பின்னர் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தின் அடிப்படையில் சரண்யா என்பவர் வழக்கு சம்பவத்தின்போது இல்லை என்பதும் வேத பிரகாஷ் என்பவர் சம்பவ சமயத்தில் இருந்தார் என்பதும் தெரிய வந்ததால் நீதிமன்றம் தன்னிச்சையாக வேதபிரகாஷ் என்பவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது நீதிமன்ற சாட்சியான அ.சா.1- ன் மகன் வேதபிரகாஷ் அவரது சாட்சியத்தில் கடந்த 05.12.2021 அன்று தனது அத்தையும் மகள் சரண்யா என்பவர் பேராவூருக்கு பெண் பார்ப்பது சம்பந்தமாக சென்றார்கள் எனவும் பேராவூருக்கு சென்றபோது அத்தையும், அத்தை மகளையும் அடித்துவிட்டதாக போன் மூலம் தனக்கும் தனது அப்பாவுக்கும் தகவல் வந்ததாகவும், இது சம்பந்தமாக தனது அத்தை நாகலட்சுமி கிளியனுர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் எனவும், அன்றைய தினமே காலை 10 மணி அளவில் திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டு நேரு வீதி மேம்பாலத்தில் தானும், தனது அப்பா அத்தை மற்றும் சரண்யா வாடகை காரில் வந்தபோது மேம்பாலத்தின் மீது 15 நபர்கள் கொண்ட கும்பல் காரை வழி மறித்து எதிரி மூர்த்தி தடியால் தனது அப்பாவின் இடது கண், கை ஆகிய இடங்களில் அடித்தார் எனவும், எதிரி ராமு கத்தியால் தனது அத்தையின் இடது தோள்பட்டையை வெட்டிவிட்டார் எனவும், எதிரி கணேசன் கல்லால் தனது இடது கண் பின்னந்தலையில் அடித்தார் எனவும், எதிரிகள் மூவரும் கொலை மிரட்டல் விடுத்து சென்றார்கள் எனவும், இது சம்பந்தமாக திண்டிவனம் காவல் நிலையம் சென்றபோது மருத்துவமனைக்கு செல்லுமாறு சொன்னார்கள் எனவும், தானும், தனது அப்பா மற்றும் தனது அத்தை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சென்று

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.05.07 05:41:10 +0530

சிகிச்சை எடுத்துக் கொண்டதாகவும், தனது அப்பா திண்டிவனம் காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

17. எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையில் நீதிமன்ற சாட்சி சம்பவம் நடந்த அன்று பேராவூருக்கு தான் செல்லவில்லை எனவும், போன் மூலம் தகவல் வந்ததாகவும், தான் சென்று பார்த்தபோது தனது அத்தைக்கு இடது தோள்பட்டையில் கிழிந்த காயம் இடது கன்னத்தில் காயம் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். தங்கள் சென்ற காரின் பதிவு எண் தெரியாது எனவும், அது வாடகை கார் எனவும், அதன் ஓட்டுனரை விசாரித்தால் சம்பவம் குறித்து தெரியவரும் எனவும் குறிப்பிட்டுள்ளார். அன்றைய தினம் திண்டிவனம் அரசு மருத்துவமனையில் இரண்டு முறை சிகிச்சை எடுத்துக் கொண்டதாகவும், அன்றைய தினமே மதியம் 2 மணிக்கு மேல் உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்தார் எனவும், பாண்டிச்சேரி தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

18. 05.12.2021 -ம் தேதியிட்ட புகாரில் பேராவூரில் நடந்த சம்பவம் குறித்து கிளியனூர் காவல் நிலையத்தில் புகார் அளித்துவிட்டு திண்டிவனம் அரசு பொது மருத்துவமனைக்கு சென்று விட்டு திரும்பி நேரும் மேம்பாலம் இரக்கத்தில் வந்த போது எதிரிகள் தலைமையில் 15 கூலிப்படைகள் காரை வழிமறித்து எதிரிகள் கத்தியை காண்பித்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் மற்றவர்கள் பெயர் தெரியாது அடையாளம் காட்ட முடியும், தன்னையும் தனது மகனையும் இடது கன்னத்தில்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.05.07 05:41:16 +0530

அடித்தார்கள் எனவும், தன்னை இடது கன்னத்தில் தடியால் அடித்து காயப்படுத்தினார்கள் எனவும், தனது மகன் மற்றும் தனது சட்டையை கிழித்தார்கள் எனவும் நடவடிக்கை எடுக்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

19. இறுதி அறிக்கையில் பேராவூரில் நடந்த சம்பவத்திற்கு திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டு வாடகை காரில் திரும்பி வரும் வழியில் திண்டிவனம் நேரு வீதி மேம்பாலத்தின் இறக்கத்தில் வந்தபோது எதிரிகள் காரை மடக்கி அ.சா.1-யை பார்த்து கொலை மிரட்டல் விடுத்து தடியால் அ.சா.1 ன் கன்னம் மற்றும் உடல் முழுவதும் அடித்து சொற்ப காயம் ஏற்படுத்தினார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. இறுதி அறிக்கையில் சம்பவ தேதி மற்றும் நேரம் குறிப்பிடப்படவில்லை.

20. சம்பவத்தன்று இரண்டு சம்பவங்கள் நடைபெற்று உள்ளது. முதல் சம்பவம் பேராவூரில் நடைபெற்று உள்ளது. அது தொடர்பாக அ.சா.3 நாகலட்சுமி கிளியனூர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். முதல் சம்பவத்தால் ஏற்பட்ட காயத்திற்கு திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டு வரும் வழியில் மேம்பாலத்தில் இரண்டாவது சம்பவமான இவ்வழக்கின் சம்பவம் நடைபெற்று உள்ளது. இது தொடர்பாக அ.சா.1 திண்டிவனம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். காயம்பட்ட அ.சா.1 சம்பவ சமயத்தில் எதிரிகள் தடியால் அவரை உடல் முழுவதும் தாக்கியதாக குறிப்பிட்டுள்ளார். அ.சா.3 எதிரிகள் மற்றும் 15 நபர்கள் காரை

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.05.07 05:41:22 +0530

வழிமறித்தார்கள் எனவும், யார் யாரை தாக்கினார்கள் என தெரியாது எனவும் குறிப்பிட்டுள்ளார். நீதிமன்ற சாட்சி- 1 அவரது சாட்சியத்தில் 1வது எதிரி தடியால் தனது அப்பாவின் இடது கண், கை ஆகிய இடங்களில் அடித்ததாகவும், 2 வது எதிரி கத்தியால் தனது அத்தையின் இடது தோள்பட்டையை வெட்டிவிட்டார் எனவும், 3 வது எதிரி கல்லால் தனது இடது கண் மற்றும் பின்னந்தலையில் அடித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

21. புகாரில் அ.சா.1 மற்றும் நீதிமன்ற சாட்சி - 1க்கு அடிபட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1 க்கு மட்டும் காயம்பட்டதாக இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இறுதி அறிக்கையுடன் அ.சா.1 ன் விபத்து பதிவேடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் 05.12.2021 காலை 11:30 மணிக்கு அ.சா.1-யை வேதபிரகாஷ் என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்தார் எனவும், அவரை 15 தெரியாத நபர்கள் தடியால் காலை 9:30 மணிக்கு நேரு வீதியின் அருகே அடித்ததாக கூறியதாகவும், அ.சா.1 க்கு நெற்றியில் கண்டிய காயம் இருந்ததாகவும், அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.3 க்கு முதல் சம்பவத்திலும் இரண்டாவது சம்பவத்திலும் அடிபட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அ.சா.3 மற்றும் நீதிமன்ற சாட்சி -1 ன் மருத்துவ ஆவணங்கள் எதுவும் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை.

22. விபத்து பதிவேட்டில் அ.சா.1 காலை 11:30 மணிக்கு அனுமதிக்கப்பட்டதாக உள்ளது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.05.07 05:41:29 +0530

அ.சா.1 அவரது சாட்சியத்தில் காலை 10:30 முதல் 11 மணி அளவில் இவ்வழக்கின் சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ளார். அ.சா.3 இவ்வழக்கின் சம்பவம் பகல் 12 மணிக்கு நடந்ததாக குறிப்பிட்டுள்ளார். நீதிமன்ற சாட்சி -1 வழக்கின் சம்பவம் காலை 10 மணி அளவில் நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ளார். சம்பவ நேரம் குறித்து புகாரிலும் இறுதி அறிக்கையிலும் சொல்லவில்லை என உதவி ஆய்வாளர் அவரது குறுக்கு விசாரணையில் குறிப்பிட்டுள்ளார். எனினும் அவரது விசாரணையில் சம்பவம் நேரம் காலை 9:30 மணிக்கு என தெரிய வந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

23. இவ்வழக்கின் சம்பவத்தில் மூன்று நபர்களுக்கு காயம்பட்டதாக சம்பவ இட சாட்சிகள் குறிப்பிட்டுள்ள போதிலும், அ.சா.1 விபத்து பதிவேடு மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 அவரது சாட்சியத்தில் முதல் சம்பவத்திற்கு பிறகு திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், இவ்வழக்கின் இரண்டாவது சம்பவம் நடைபெற்ற பிறகு பாண்டிச்சேரி தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுக் கொண்டதாக குறிப்பிட்டுள்ளார். பாண்டிச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டதாக எவ்வித ஆவணமும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே மேற்படி காரணங்களினால் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ.7 விபத்து பதிவேட்டில் உள்ள காயங்கள் அ.சா.1 க்கு முதல் சம்பவத்தால் ஏற்பட்டதா? அல்லது இரண்டாவது சம்பவத்தால் ஏற்பட்டதா? என்பது குறித்து சந்தேகிக்கும் வகையில் உள்ளது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.05.07 05:41:34 +0530

24. சம்பவ இட சாட்சிகளான அ.சா.1, அ.சா.3 மற்றும் நீதிமன்ற சாட்சி - 1 ஆகியோர் சம்பவ சமயத்தில் யார், யார் இருந்தார்கள், யார் எந்த ஆயுதத்தால், யாரை தாக்கினார்கள் என்பது குறித்து முரண்பட சாட்சியம் அளித்துள்ளனர். மேலும் இரண்டாவது சம்பவத்தின் போது வாடகை காரில் சென்ற போது வழி மறித்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில், அந்த காரின் ஓட்டுனர் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. அது குறித்து அரசு தரப்பில் எவ்வித விளக்கமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே மேற்படி காரணங்களினால் சம்பவம் குறித்து சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்ய அரசு தரப்பில் தவறிவிட்டது என இந் நீதிமன்றம் கருதுகிறது.

25. பார்வை மகசர் சாட்சியான **அ.சா.4 திரு.முகமது மீரான்** அவரது சாட்சியத்தில் கடந்த 2021-ம் வருடம் 12 வது மாதம், தேதி நினைவில்லை காலை 7- 8 மணி அளவில் திண்டிவனம் மேம்பாலம் இறங்கும் இடத்தில் நேரு வீதி அருகே பஜாருக்கு சென்றபோது திண்டிவனம் காவல் நிலைய போலீசார் அழைத்து கையொப்பமிட்டதாகவும், எதற்காக கையொப்பம் வாங்கினார்கள் என தெரியாது எனவும், பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பம் தன்னுடையது எனவும் குறிப்பிட்டுள்ளார். அ.சா.4 பிறழ் சாட்சியமாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார் எனினும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எவ்வித சாட்சியமும் முன்னிடப்படவில்லை.

26. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி **அ.சா.5 திரு. ஆனந்தராசன் காவல்**

ELAVARASI Digitally signed by ELAVARASI
Date: 2026.05.07 05:41:41 +0530

**உதவி ஆய்வாளர்** அவரது சாட்சியத்தில் கடந்த 05.12.2021 இரவு 9:30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று இதச சட்டப்பிரிவுகள் 341, 147, 148, 323, 324, 506 (1) ன் கீழ்முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். மறுநாள் காலை 7:00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முகமது மீரான், செந்தில்குமார் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரிகள் நீதிமன்றத்தில் முன் பிணையில் சென்றுள்ளார்கள். சாட்சிகள் விசாரணையில் அடையாளம் தெரியாத 15 நபர்கள் அடித்துவிட்டதாக கூறியவர்கள் சம்பவத்தை வேடிக்கை பார்த்தவர்கள் என்பதால் வழக்கின் சட்ட பிரிவுகளை அறிக்கை மூலம் மாற்றம் செய்துள்ளார். இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்றுள்ளார். வழக்கின் புலன் விசாரணை முடித்துக் கொண்டு எதிரிகள் மீது இதச சட்டப்பிரிவுகள் 341, 323, 324, 506(1) - ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக குறிப்பிட்டுள்ளார்.

27. எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.5 புகாரில் கத்தியால் வெட்டியதாக உள்ளது. ஆனால் யார் யாரை வெட்டினார்கள் என சொல்லவில்லை எனவும், இவ்வழக்கின் சம்பவத்திற்கு பிறகு காலை 11:30 மணிக்கு அ.சா.1 சிகிச்சைக்கு சென்றதாக விபத்து பதிவேட்டில் உள்ளதாகவும், வாடகை காரின் ஓட்டுனரை வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை. வழக்கின் சம்பவம் எத்தனை மணிக்கு

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.05.07 05:41:47 +0530

நடந்தது என புகாரிலும், விசாரணையிலும் இல்லை எனவும், 40 நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், வேதபிரகாஷின் விபத்து பதிவேடு கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

28. நீதிமன்ற கேள்வியின் போது அ.சா.5 சம்பவம் நடந்த நேரம் காலை சுமார் 9:30 மணி என விசாரணையில் தெரிந்து கொண்டதாகவும், அ.சா.1 ன் மகன் வேத பிரகாஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அந்த வாக்குமூலம் சிடி பைலில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். வேதபிரகாஷ் என்பவரை சாட்சி பட்டியலில் தவறுதலாக தட்டச்சு செய்யவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். முதல் சம்பவத்தின் போது அ.சா.1 அவரது தங்கை அ.சா.3 ன் மகள் சரண்யா ஆகியோர் இருந்ததாகவும், இது தொடர்பாக கிளியனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் எனவும், இரண்டாவது சம்பவமான இவ்வழக்கின் சம்பவ சமயத்தில் அ.சா.1, அ.சா3 மற்றும் நீதிமன்ற சாட்சி வேதபிரகாஷ் ஆகியோர் இருந்தார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

29. சம்பவ சமயத்தில் அ.சா.1, அ.சா.3 வேத பிரகாஷ் மற்றும் வாடகை கார் ஓட்டுனர் ஆகியோர் இருந்ததாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், வேதபிரகாஷ் என்பவர் சாட்சி பட்டியலில் சேர்க்கப்படவில்லை. இது குறித்து அரசு தரப்பில் பின்னிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சம்பவயிட

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.05.07 05:41:52 +0530

சாட்சிகள் மற்றும் உதவி ஆய்வாளர் சாட்சியத்தின் அடிப்படையில் நீதிமன்றம் தன்னிச்சையாக வேத பிரகாஷ் என்பவருக்கு அழைப்பாணை அனுப்பி அனைத்து விசாரிக்கப்பட்டுள்ளது. வாடகை கார் ஓட்டுநர் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. வேதபிரகாஷ் தட்டச்சுப் பிழையாக சாட்சி பட்டியலில் சேர்க்கவில்லை மற்றும் சம்பவம் நேரம் குறித்து இறுதி அறிக்கையில் குறிப்பிடாதது ஆகியவை புலன் விசாரணையின் குறைபாடாகும்.

30. ஒரே தினத்தன்று இரண்டு சம்பவங்கள் வெவ்வேறு காவல் நிலையத்திற்கு உட்பட்ட இடங்களில் நடைபெற்றுள்ள நிலையிலும் இரண்டாவது சம்பவம் குறித்து திண்டிவனம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ள நிலையிலும் உதவி ஆய்வாளர் அ.சா.5 சம்பவ தேதி, நேரம் சம்பவ சமயத்தில் யார், யார் இருந்தார்கள் என்பது குறித்தும் விசாரித்து சாட்சி பட்டியலை முறையாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி புலன் விசாரணையின் குறைபாடுகள் வழக்கு பொருண்மை மற்றும் சூழ்நிலைகள் பொறுத்து அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் வகையில் உள்ளது.

31. காயம்பட்ட சாட்சி மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சம்பவம் குறித்தும் புகார் அளித்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 மற்றும் நீதிமன்ற சாட்சி - 1 வேதபிரகாஷ் ஆகியோர் சம்பவம் குறித்து சாட்சியம் அளித்துள்ளனர். சம்பவம் குறித்து அ.சா.1, அ.சா.3 மற்றும் நீதிமன்ற சாட்சி 1

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.05.07 05:41:58 +0530

ஆகியோர் முரண்பட சாட்சியம் அளித்துள்ளனர். கேள்வியுற்ற சாட்சியான அ.சா.2 மற்றும் மற்றும் பார்வை மகசர் சாட்சியான அ.சா.4 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளனர். காவல் உதவி ஆய்வாளர் அ.சா.5 வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார். எனவே மேற்படி சாட்சியங்களில் இருந்து எதிரிகள் சம்பவ இட சாட்சிகளை வழி மறித்து, அபாயகரமான ஆயுதத்தால் தாக்கி, சொற்ப காயத்தை ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

32. அரசு தரப்பு சாட்சியங்கள் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் நீ.ம.சா.1 சாட்சியங்களின்படி எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 323,324,506(1)- ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**33. இறுதியாக, எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 323,324,506(1) ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச பிரிவு 248(1) - ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.05.07 05:42:05 +0530

34. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் அது இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மே திங்கள் 07-ம் தேதி, வியாழக்கிழமை என்னால் அவையறிய பகரப்பட்டது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.05.07 05:42:10 +0530

நீதித்துறை நடுவர் எண். I,
திண்டிவனம்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு.அரிகிருஷ்ணன் | காயம்பட்ட சாட்சி மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.கிருஷ்ணமூர்த்தி | கேள்வியுற்ற சாட்சி |
| அ.சா.3 | திருமதி.நாகலட்சுமி | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு. முகம்மது மீரான் | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.5 | திரு. அனந்தராசன்,<br>உதவி ஆய்வாளர் | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

| அ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 05.12.2021 | புகார் மனு | அ.சா.1 |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.2 | | பார்வை மகசரில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் | அ.சா. 4 |
| அ.சா.ஆ.3 | 05.12.2021 | முதல் தகவல் அறிக்கை | அ.சா. 5 |
| அ.சா.ஆ.4 | 06.12.2021 | பார்வை மகசர் | அ.சா. 5 |
| அ.சா.ஆ.5 | 06.12.2021 | மாதிரி வரைபடம் | அ.சா.5 |
| அ.சா.ஆ.6 | 06.12.2021 | பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.7 | 05.12.2021 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று | அ.சா.5 |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:-இல்லை

**நீதிமன்ற சாட்சி**:-

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.1 | திரு.வேதபிரகாஷ் | புகார்தாரரின் மகன் மற்றும் சம்பவ இட சாட்சி |

ELAVARASI

Digitally signed by ELAVARASI
Date: 2026.05.07 05:42:16 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.